# காலாண்டுத் தேர்வு - 2022

## மொழிப்பாடம் பகுதி - I தமிழ்

12ஆம் வகுப்பு பதிவு எண் :

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் 90

### பகுதி I

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14x1=14

1. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்குதற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்,
   க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது
   உ) பொதிகையில் தோன்றியது
   ங) வள்ளல்களைத் தந்தது
   அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி இ) ந மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி
2. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
   அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்
3. பொருத்துக.
   அ) குரங்குகள் – 1. கன்றுகளைத் தவிர்த்தன
   ஆ) பசுக்கள் – 2. மரங்களிலிருந்து வீழ்ந்தன
   இ) பறவைகள் – 3. குளிரால் நடுங்கின
   ஈ) விலங்குகள் – 4. மேய்ச்சலை மறந்தன
   அ) 1, 3, 4, 2 ஆ) 3, 1, 2, 4 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 3, 4
4. வையகமும் வானகமும் ஆற்றலரிது – எதற்கு?
   அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன் தூக்கார் செய்த உதவி
   இ) தினைத்துணை நன்றி ஈ) செய்ந்நன்றி
5. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல. அது நம்பிக்கை மையம். காரணம் –
   அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்
   ஆ) மென்பொருள், வன்பொருள் வாகன உற்பத்தியில் பங்கு
   இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை
   ஈ) அ, ஆ, இ அனைத்தும் சரி
6. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்
   அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை
7. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை
   அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்
   இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்
8. "உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும்" – இத்தொடர் உணர்த்துவது
   அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது
   ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது
   இ) காலநிலை மாறுபடுகிறது
   ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது

www.Padasalai.Net



CamScanner

9. பேச்சுத் தமிழில் அமைந்த தொடரை தேர்க.

அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.
ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.
இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.
ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன

10. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.

அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்
ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்
இ) நிறுத்தற்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்
ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்

11. பூமணி எப்புதினத்திற்காக 2014இல் சாகித்ய அகாதெமி விருது பெற்றார்?

அ) வெக்கை ஆ) கொம்மை இ) அஞ்ஞாடி ஈ) வாய்க்கால்

12. 'தலைக்குளம்' என்னும் கதையின் ஆசிரியர்

அ) பீர்முகமது ஆ) தோப்பில் முகமது மீரான் இ) அப்துல் ரகுமான் ஈ) ஜெயகாந்தன்

13. 'இதில் வெற்றிபெற' என்னும் சுரதாவின் பாடலில் இடம்பெற்றுள்ள பாவகை

அ) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஆ) கலிவிருத்தம்
இ) எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஈ) நேரிசை ஆசிரியப்பா

14. மருதத்திணைப் பாடல் ஒன்றில் மகளிர் 'தம்மனை', 'நும்மனை' என மனைவியின் இல்லத்தையும் கணவனின் இல்லத்தையும் பிரித்துப் பேசும் நூல்

அ) குறுந்தொகை ஆ) அகநானூறு இ) ஐங்குறுநூறு ஈ) கலித்தொகை

## பகுதி II

### பிரிவு -1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x2=6

15. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' – விளக்கம் தருக.

16. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?

17. 'இடையீடு' – எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது?

18. கலிவிழா, ஒலிவிழா விளக்கம் தருக.

### பிரிவு -2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x2=4

19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

20. புக்கில், தன்மனை – சிறு குறிப்பு எழுதுக.

21. அக்காலத்துக் கல்வி முறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?

### பிரிவு -3 7x2=14

எவையேனும் ஏழனுக்கு விடை தருக

22. ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?

23. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக

அ) தந்தனன் ஆ) கலங்கி

24. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக

அ) உள்ளொன்று ஆ) நன்றல்லது

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593 CamScanner

25. உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.

அ) தாமரை இலை நீர் போல ஆ) கிணற்றுத் தவளை போல

26. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

தலை, தளை, தழை

27. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

அ) எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது.

ஆ) ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.

28. பேச்சுவழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

அ) நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்

ஆ) அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான.

29. பின்வரும் கலைச்சொல்லிற்கு ஏற்ற தமிழ்ச் சொற்களைத் தருக.

அ) Metro Train ஆ) Tips

30. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

அ) தாமரை ஆ) வெங்காயம்

## பகுதி III

### பிரிவு -1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

31. 'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்' – தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

32. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

33. இல்வாழ்க்கை சிறப்புற அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வழிநின்று விளக்குக.

34. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

### பிரிவு-2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

35. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

36. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்?

37. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம் – விளக்கம் எழுதுக.

38. சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் – விளக்குக.

### பிரிவு -3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x4=12

39. அ) பொருள் வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

அல்லது

ஆ) அன்பு அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.



CamScanner

40. இலக்கிய நயம் பாராட்டுக.

(மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை விளக்குக.)

பிறப்பினால் எவர்க்கும் – உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் – நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே – உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே – அண்டித்
தீண்ட ஒண்ணாதார்!

– கவிமணி தேசிக விநாயகம்

41. பரிசில் துறையைச் சான்றுடன் விளக்குக.

42. தமிழாக்கம் தருக.

In terms of human development objectives, education is an end in itself, not just a means to an end. Education is a basic human right. It is also the key which opens many economic, social and political doors for people. It increases access to income and employment opportunities. While economists generally analyse the importance of education largely as a means for better opportunities in life-and that is the main theme of this chapter-let it be clearly stated that educating people is a worthy goal in itself, irrespective of the economic rates of return.

43. 'தமிழ்' அல்லது 'அன்பு' என்னும் தலைப்பில் கவிதை ஒன்றினை எட்டு அடிகளுக்கு மிகாமல் எழுதுக.

## பகுதி IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3x6=18

44. அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

ஆ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைக்கொண்டு நிறுவுக.

45. அ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.

ஆ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

ஆ) "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" – இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

## பகுதி V

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக. 4+2 = 6

அ) 'ஒருமையுடன்' எனத் தொடங்கும் தெய்வமணிமாலை பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'படும்' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593 CamScanner